AL/2016/25-A/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

| | | |
|---|---|---|
| ඉතිහාසය | II | (I කොටස) |
| வரலாறு | II | (பகுதி I) |
| History | II | (Part I) |

**25-A T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**இந்திய வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி. 1206 வரை**

சுட்டெண்: ....................................

**அறிவுறுத்தல்கள்:**

- ✻ இப்பகுதியில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாப்பத்திரத்திலேயே** விடை எழுதுக.
- ✻ ஒவ்வொரு வினா தொடர்பாகவும் **ஐவைந்து** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** சரியானது. ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து, பின் அதனை இப்பத்திரத்திலேயே **அறிவுறுத்தல்களுக்கமைய குறிப்பிடுக.**
- ✻ இப்பகுதிக்கு **40** புள்ளிகள் வழங்கப்படும்.
- ✻ **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** உமது விடைத்தாள்களை ஒப்படைக்கும் பொழுது **பகுதி I** இற்கான விடைகளை எழுதிய பின்னர், அதனைப் **பகுதி II** இற்கான விடைத்தாளுடன் **இணைத்து ஒப்படைக்க வேண்டும்.**

## பகுதி I

- **1 - 10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவ் ஐந்தினுள் **ஒன்று** மற்றவையோடு **பொருந்தாது. பொருந்தாத** அப்பெயரைத் தெரிவு செய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** இடுக.

**1.** (1) ஜோன் மார்ஷல் (2) R. D. பனேர்ஜி (3) மோர்ட்டிமர் வீலர்
(4) A. L. பஷாம் (5) ஸ்ருவர்ட் பிகொட் (.........)

**2.** (1) நீலகிரி (2) இந்துக்குஷ் (3) விந்தியம்
(4) ஆரவல்லி (5) சத்புர (.........)

**3.** (1) சம்பால் (2) ஜமுனா (3) கோமதி
(4) ராவி (5) கோகிரா (.........)

**4.** (1) ராஜகிருகம் (2) சம்பா (3) பாடலிபுரம்
(4) சுப்பாரக (5) பிரயாக (.........)

**5.** (1) நாலந்தா (2) விக்கிரமசீலா (3) ஜகத்தல
(4) சோமநாத் (5) ஓதந்தபுரி (.........)

**6.** (1) பசுபதி (2) சிவன் (3) பிரம்மா
(4) யோகீஸ்வரன் (5) மகாயோகி (.........)

**7.** (1) நிகண்டநாதபுத்திர (2) பூர்ண காசியப்ப (3) மக்கலி கோஷல
(4) சாங்கிய (5) அஜித கேஷகம்பல (.........)

**8.** (1) குமார சம்பவம் (2) விக்கிரமோர்வசி (3) மிருச்சகடிகம்
(4) ருதுசம்ஹாரம் (5) மேகதூதம் (.........)

**9.** (1) சேரர் (2) பாண்டியர் (3) சந்தேலர்
(4) சோழர் (5) பல்லவர் (.........)

**10.** (1) முகம்மது பின் காசிம் (2) சபுக்திஜின் (3) கசினி முகமது
(4) கோரி முகமது (5) குதுப் - உத் - தீன் - அயிபக் (.........)

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

- **11 - 15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிப்** பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒரு** சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியைத் தெரிந்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**11.** (1) துங்கபத்திரை - மேற்கு மலைத்தொடர்
(2) நர்மதை - விந்தியம்
(3) காவேரி - நீலகிரி
(4) ராவி - சுலைமான்
(5) தப்தி - சத்புர மலைத்தொடர் (.........)

**12.** (1) கிர்நார் கல்வெட்டு - அசோகன்
(2) ஜினகார்ட் கல்வெட்டு - உருத்திர தாமன்
(3) நாசிக் கல்வெட்டு - கௌதமி பாலசிறி
(4) மதுராக் கல்வெட்டு - இரண்டாம் சந்திரகுப்தன்
(5) ஐகொளே கல்வெட்டு - கௌதமிபுத்திர சாதகர்ணி (.........)

**13.** (1) தாராநாதர் - சீனா
(2) அல்பருனி - அரேபியா
(3) கொஸ்மாஸ் - பைசாந்தியம்
(4) மெகஸ்தினிஸ் - கிரேக்கம்
(5) ஸ்ரேபோ - உரோமாபுரி (.........)

**14.** (1) மகதம் - பிம்பிசாரன்
(2) காந்தாரம் - புக்குசாதி
(3) கோசலம் - பசேனாதி
(4) அவந்தி - வஸ்ஸகார
(5) வத்ஸ - உதயணன் (.........)

**15.** (1) வாதாபிகொண்ட - முதலாம் நாசிம்மவர்மன்
(2) சகல உத்தராபதநாத - ஹர்ஷவர்த்தனன்
(3) அமித்திரகாத - அசோகன்
(4) தக்ஷிணாபதநாத - முதலாம் சாதகர்ணி
(5) விக்கிரமாதித்தன் - இரண்டாம் சந்திரகுப்தன் (.........)

- **16 - 20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் என்பவற்றின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையிலே தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கிலே **தரப்படவில்லை. Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலிற்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**16.**

| X | Y |
|---|---|
| (i) இந்திரப்பிரஸ்தம் | A கங்கை |
| (ii) கன்னோசி | B கோதாவரி |
| (iii) பாருகச்ச | C யமுனா |
| (iv) அமராவதி | D கிருஷ்ணா |
| (v) பிரதிஸ்தான் | E நர்மதா |

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (.........)

**17.**

| X | Y |
|---|---|
| (i) டெமெற்றியஸ் | A இந்து - கிரேக்கர் |
| (ii) நாஹபான | B ஹூண |
| (iii) சிமுக | C சாதவாகன |
| (iv) தோரமான | D சக |
| (v) தந்திதுர்க்க | E ராஷ்டிரகூட |

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (.........)



Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

**18.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | சூரிய சித்தாந்த | A | பாண |
| (ii) | மத்தவிலாச பிரகஸனம் | B | விசாகதத்த |
| (iii) | முத்ரராக்சஷ | C | முதலாம் மகேந்திரவர்மன் |
| (iv) | ஹர்ஷ சரிதம் | D | நாகார்ஜுன |
| (v) | விபாஷ சூத்திர | E | ஆரியபட்டர் |

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (.........)

**19.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | துர்கபால | A | அந்தப்புரத்திற்குப் பொறுப்பான அதிகாரி |
| (ii) | சமாகர்த்தா | B | கோட்டைகளின் பாதுகாவலர் |
| (iii) | சார்த்தவாக | C | படையணித்தலைவன் |
| (iv) | மகாதண்டநாயக்க | D | வணிகர் தலைவன் |
| (v) | அந்தர்வேஸிக | E | ஆட்சியாளர் நாயகம் |

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (.........)

**20.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | தஞ்சாவூர் பிரகதீஸ்வரம் கோயில் | A | கொயிஸலர் |
| (ii) | எல்லோரா கைலாசநாதர் கோயில் | B | சாளுக்கியர் |
| (iii) | வாதாபி விஷ்ணு கோயில் | C | ராஷ்டிரகூடர் |
| (iv) | வேலூர் சென்னகேஸவ ஆலயம் | D | பல்லவர் |
| (v) | மாமல்லபுரம் கடற்கரைக் கோயில் | E | சோழர் |

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (.........)

● **21 - 25** வரையுள்ள எல்லா வினாக்களின் சரியான விடையினைத் தெரிந்து, அதன் **இலக்கத்தினை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**21.** **இந்திக்காவின் ஆசிரியர் யார்?**
(1) ஹெரோடோற்றஸ் (2) பிளினி (3) மெகஸ்தினிஸ்
(4) கௌடில்யர் (5) அல்பரூனி (.........)

**22.** **குஷாண வம்சத்து முதல் அரசனின் பெயர் என்ன?**
(1) வீம கட்ப்பிஸ (2) குஜுல் கட்ப்பிஸ (3) கனிஷ்க
(4) வசிஷ்க (5) குவிஷ்க (.........)

**23.** **சுதர்ஷன தடாகம் முதன்முதலாகக் கட்டப்பட்ட காலத்து அரசனின் பெயர் என்ன?**
(1) சந்திரகுப்த மோரியன் (2) காரவேல (3) ஸ்கந்தகுப்தன்
(4) உருத்திரதாமன் (5) முதலாம் சாதகர்ணி (.........)

**24.** **விஸ்வகர்மா குகை காணப்படும் தலம் எது?**
(1) எல்லோரா (2) அஜந்தா (3) பாக்
(4) வாதாபி (5) சாரணாத் (.........)

**25.** **ராஷ்டிரகூடரின் தலைநகரின் பெயர் என்ன?**
(1) மான்யகேத (2) மதுரை (3) வாதாபி
(4) தஞ்சாவூர் (5) காவேரி (.........)

● **26 - 30** வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவ்விடயங்களுள் **ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது.** அதனைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**26.** **மோரியரின் மாகாண ஆட்சிமுறை**
(1) பேரரசு சில மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
(2) தலைநகர் அடங்கிய மாகாணம் பேரரசனின் கட்டுப்பாட்டிலிருந்தது.
(3) பிரதானமான மாகாணங்களைக் குமாரர்கள் ஆட்சி புரிந்தனர்.
(4) ஒரு காலத்தில் உஜ்ஜைனி மாகாணத்தை அசோகன் நிருவாகம் செய்தான்.
(5) மாகாணங்களை ஆட்சிபுரிந்த குமாரர்களை கல்வெட்டுகளில் குமாரமாத்திய என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (.........)

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**27. நந்த வம்சம்**

(1) ஹரியங்க வம்சத்தின் பின்பு நந்தர்கள் மகதத்தில் ஆதிக்கம் பெற்றனர்.
(2) மகாபத்ம நந்தனே நந்த வம்சத்தின் முதலாவது அரசன்.
(3) மகாபத்ம நந்தனின் தாய் ஒரு பிராமணப் பெண் என்று புராணங்கள் கூறும்.
(4) மகாபத்ம நந்தனின் பின்பு அவனது புதல்வர் எண்மர் நாட்டை ஆட்சி புரிந்தனர்.
(5) இறுதி நந்த அரசனாகிய தனநந்தனைக் கொலை செய்த பின்பு சந்திரகுப்த மோரியன் அதிகாரம் பெற்றான். (.........)

**28. பாண்டியர்**

(1) பாண்டியரின் தலை நகரம் தஞ்சாவூராகும்.
(2) பாண்டியர்கள் சுதந்திரமான அரசர்கள் என்று அசோகனுடைய கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.
(3) சோழ மன்னனாகிய முதலாம் பராந்தகன் இரண்டாம் மாறவர்மன் இராஜசிங்கனைத் தோற்கடித்தான்.
(4) முதலாம் பாண்டியப் பேரரசு கடுங்கோனால் அமைக்கப்பட்டது.
(5) கி.பி. 1190 இல் ஜடாவர்மன் குலசேகரன் பாண்டியரின் சிம்மாசனத்தைப் பெற்றமை இரண்டாம் பாண்டியப் பேரரசின் தொடக்கமாகக் கருதப்படுகிறது. (.........)

**29. குப்தர் பண்பாடு**

(1) குப்தர் காலத்து இலக்கியங்களிற் பெரும்பாலானவை சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டவை.
(2) உள்நாட்டுப் பாதுகாப்பு, செல்வம் ஆகியனவே சமயம், இலக்கியம், கலை, விஞ்ஞானம் ஆகியவற்றின் முன்னேற்றத்துக்கு ஏதுவாக இருந்தன.
(3) இக்காலத்தில் பிராமணரின் சமயம் இந்து சமயமாக மாறியது.
(4) சாரணாத்தில் உள்ள புத்தரின் ஆசனக் கோலமான சிற்பம் இக்காலத்துச் சிற்பங்களில் உன்னதமானது.
(5) இக்காலத்தவர்களில் மிக முக்கிய கடவுள் இந்திரனே ஆவான். (.........)

**30. சிவ வழிபாடு**

(1) சிவ வழிபாடு தென் இந்தியாவில் பெருமளவில் மக்களிடையே பரவியிருந்தது.
(2) பல்லவ, சோழ மன்னர்களில் பெரும்பாலானோர் சிவபெருமானின் பக்தர்கள் ஆவர்.
(3) தஞ்சாவூரிலும் காஞ்சியிலும் பெருந்தொகையான சிவாலயங்கள் உள்ளன.
(4) பல்லவர்களதும் சோழர்களதும் ஆட்சியில் இராச்சியங்கள் புற சமயங்களுக்கு இடமளிக்கவில்லை.
(5) ஒரு காலத்தில் வைணவ சீர்திருத்தவாதியான இராமானுஜர் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் மைசூருக்கு ஓடவேண்டி இருந்தது. (.........)

- **31 - 35** வரையுள்ள ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** அல்லது **பல** சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

**(A)** யும் **(B)** யும் மட்டும் சரியாயின் .................. **1** எனவும்
**(B)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் .................. **2** எனவும்
**(C)** யும் **(D)** யும் மட்டும் சரியாயின் .................. **3** எனவும்
**(A)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் .................. **4** எனவும்

**ஒரு விடை மட்டும்** அல்லது **இரண்டிற்கு மேற்பட்ட** விடைகள் சரியாயின் ... **5** எனவும் **அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மட்டும் சரி | **(B)** யும் **(C)** யும் மட்டும் சரி | **(C)** யும் **(D)** யும் மட்டும் சரி | **(A)** யும் **(C)** யும் மட்டும் சரி | **ஒரு விடை மட்டும்** அல்லது **இரண்டிற்கு மேற்பட்ட** விடைகள் சரி |

**31. இலக்கிய மூலங்கள்**

(A) இந்தியாவின் மிகப் பழமையான இலக்கியம் சமய சம்பந்தமானது.
(B) வேதங்களில் வரலாற்று விபரங்கள் அதிகம் காணப்படுகின்றன.
(C) காஷ்மீர் தேச வரலாறு பற்றிய ஆதாரபூர்வமான விபரங்கள் கல்ஹணர் எழுதிய இராஜதரங்கினியில் உள்ளன.
(D) இந்தியா பற்றி வெளிநாட்டவர்கள் எழுதிய குறிப்புகளில் ஹெரோடோற்றஸ் எழுதியவை காலத்தால் முற்பட்டவை. (.........)

**32. இருக்கு வேத காலம்**

(A) மக்கள் பல இனக் குழுக்களாகப் பிரிந்திருந்தனர்.
(B) அக்காலத்தில் கௌரவரும், பாஞ்சாலரும் பிரதானமான இனக் குழுக்களாவர்.
(C) தென் இந்தியாவில் ஆரியர்கள் தங்கள் குடியேற்றங்களை ஏற்படுத்தினார்கள்.
(D) சமுதாயம் நான்கு வருணங்களாகப் பிரிந்திருந்தமையை இருக்கு வேதம் குறிப்பிடுகின்றது. (.........)

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**33.** **பிம்பிசார மன்னன்**

(A) மகத இராச்சியத்தின் தலைநகராகப் பாடலிபுரத்தை பிம்பிசாரன் அமைத்தான்.
(B) பிம்பிசார மன்னன் ஹரியங்க குலத்து முதல் அரசன் ஆவான்.
(C) 'செணிய' என்னும் பட்டப் பெயரால் அவனை அழைத்தனர்.
(D) அவன் இராணுவப் படையெடுப்புகள் மூலம் மட்டுமே தனது இராச்சியத்தை விசாலமாக்கினான். (.........)

**34.** **இரண்டாம் சந்திரகுப்தன்**

(A) அவன் சகரைத் தோற்கடித்த பின்பு மாளவம், குஜராத், சௌராஷ்டிரம் ஆகியவற்றை தனது இராச்சியத்துடன் இணைத்துக் கொண்டான்.
(B) தனது மகளை வாகாடக இளவரசனாகிய உருத்திர சேனனுக்கு மணம் முடித்து வைத்ததன் மூலம் வாகாடகரை தன் வசப்படுத்திக் கொண்டான்.
(C) வடமேற்கு இந்தியாவில் முன்னேறிச் சென்ற நாடோடிகளான ஹுணரைத் தோற்கடித்து வெற்றி பெற்றான்.
(D) இந்தியாவில் முதன் முதலாக பொற்காசுகளை வெளியிட்ட குப்த மன்னராக அவனைக் கொள்வர். (.........)

**35.** **மேலைச் சாளுக்கியர்**

(A) மேலைச் சாளுக்கியரின் தலைநகரான வாதாபிக்கு பாகியன் சென்றார்.
(B) மேலைச் சாளுக்கிய அரசரில் ஒருவரான இரண்டாம் புலிகேசி நர்மதை ஆற்றுக்கு அண்மையில் ஹர்ஷவர்த்தனனைத் தோற்கடித்தார்.
(C) பல்லவ அரசனாகிய முதலாம் நரசிம்மவர்மன் இரண்டாம் புலிகேசியைத் தோற்கடித்தார்.
(D) சோழ மன்னரில் முதலாம் குலோத்துங்கன் மேலைச் சாளுக்கியரின் பிரதேசத்தை தனது இராச்சியத்தோடு இணைத்தான். (.........)

● **36 - 40** வரையுள்ள வினாக்களில் **இரண்டு** கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து **அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 1 | சரியானது | பிழையானது |
| 2 | சரியானது | சரியானது |
| 3 | பிழையானது | பிழையானது |
| 4 | பிழையானது | சரியானது |
| 5 | சரியானது | சரியானதும் **முதலாம்** கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும். |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இந்தியாவிலே பதினாறு மகாஜனபதங்கள் இருந்தனவென்று அங்குத்தர நிகாய என்பதன் மூலம் அறிய முடிகின்றது. | பதினாறு ஜனபதங்களில் சாக்கியரின் கபிலவஸ்து இராச்சியமும் ஒன்றாகும். | (.........) |
| **37.** | ஒன்பது தேசங்களுக்கு பௌத்த தூதுக் குழுக்களை அனுப்பியமை பற்றி அசோகனுடைய கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. | மகிந்ததேரரை இலங்கைக்கு அனுப்பினார்கள் என்று அசோகனுடைய கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளது. | (.........) |
| **38.** | சகர் மத்திய ஆசியாவில் இருந்து வந்த ஒரு நாடோடிக் குழுவினர். | சகர் வசமுள்ள பிரதேசங்கள் ஷத்திரப்ப என்ற பிரிவுகளைக் கொண்டிருந்தன. | (.........) |
| **39.** | குஷாணர்களைத் துரத்திய பின் சாதவாகனர் தக்கிணத்தில் தமது இராச்சியத்தை அமைத்துக் கொள்ள முடிந்தது. | சாதவாகன வம்சத்தவரே தக்கிணத்தில் முதலாவது பேரரசை அமைத்தனர். | (.........) |
| **40.** | சசாங்கனுக்குப் பின்பு கன்னோசி குர்ஜர - பிரதிகாரர் வசமாயிற்று. | குர்ஜர - பிரதிகார வம்சத்து அரசன் முதலாம் நாகபட்டனால் சிந்திலே அராபியரைத் தோற்கடிக்க முடிந்தது. | (.........) |

* *

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]


ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

| ඉතිහාසය II<br>வரலாறு II<br>History II | 25-A | T |
|---|---|---|

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. **1**

විභාග අංකය / சுட்டெண் / Index No. ........................................




Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

ඉතිහාසය II (II කොටස)
வரலாறு II (பகுதி II)
History II (Part II)

25-A T II

## இந்திய வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி. 1206 வரை

**அறிவுறுத்தல்கள்:**

✻ **முதலாம்** வினாவுக்கும் வேறு ஏதாவது **மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **இந்தியாவின் புறவுருவப்படம்** வழங்கப்படும்.)

### பகுதி II

**1.** உமக்கு வழங்கப்பட்ட புறவுருவப்படத்திலே மேலே தரப்பட்ட **எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிட்டு,** அவற்றுள் எவையேனும் **இரண்டுக்கு** சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகள் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| (i) கைபர் கணவாய் | (ii) கோதாவரி நதி | (iii) பிரயாக | (iv) சுலைமான் மலைத்தொடர் |
| (v) உஜ்ஜைனி | (vi) மதுரை | (vii) சுப்பாரக | (viii) இந்திரப்பிரஸ்தம் |

*(சரியாகக் குறித்துப் பெயரிட்ட ஒவ்வொன்றுக்கும் **01** புள்ளி; ஒவ்வொரு சுருக்கமான குறிப்புக்கும் **05** புள்ளிகள்)*

**2.** இந்து கங்கை சமவெளி இந்திய வரலாற்றை எவ்வாறு செல்வாக்குக்குட்படுத்தியுள்ளது என்பதை விளக்குக. *(14 புள்ளிகள்)*

**3.** சிந்து வெளி நாகரிகத்தை மேல்வரும் தலைப்புகளில் ஆராய்க.
(i) நகரத் திட்டமிடல் *(07 புள்ளிகள்)*
(ii) நாகரிகத்தின் வீழ்ச்சி *(07 புள்ளிகள்)*

**4.** கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வட இந்தியாவில் ஏற்பட்ட சமய சிந்தனைகளின் பிரதானமான அம்சங்களைப் பரிசீலனை செய்க. *(14 புள்ளிகள்)*

**5.** "அசோகன் பின்பற்றிய கொள்கைகள் மோரியப் பேரரசின் வீழ்ச்சிக்கு ஏதுவாக இருந்தன."
(i) மோரிய வம்சத்தின் இறுதி அரசன் யார்? *(01 புள்ளி)*
(ii) மோரியரின் சிம்மாசனத்தைக் கைப்பற்றிய அரசனதும் அவனது வம்சத்தினதும் பெயர்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*
(iii) மக்களின் அறவழிச் சிந்தனைகளை மேம்படுத்துவதற்கு அசோகன் கடைப்பிடித்த கொள்கைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*
(iv) இவ்வினாவிலே மேற்கோளாகத் தரப்பட்ட கூற்றினை ஏற்றுக்கொள்கின்றீரா? உமது காரணங்களைக் குறிப்பிடுக. *(07 புள்ளிகள்)*

**6.** மோரியரின் வீழ்ச்சிக்கும் குப்தர் ஆட்சியின் தொடக்கத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் வடமேற்கு இந்தியாவில் நிலவிய அரசியல் நிலைமைகளைப் பரிசீலனை செய்க. *(14 புள்ளிகள்)*

**7.** "சமுத்திர குப்தனின் அரசியல் வாழ்க்கை முழுவதும் இராணுவப் படையெடுப்புகளாகவே அமைந்தது."
(i) அவனுடைய இராணுவ நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள் அடங்கிய கல்வெட்டின் பெயரைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*
(ii) அவனுக்கு முன்பும் அவனுக்குப் பின்பும் ஆட்சி புரிந்த மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*
(iii) குப்தப் பேரரசின் விரிவாக்கலில் சமுத்திரகுப்தனின் பங்களிப்பினைக் கணிப்பிடுக. *(03 புள்ளிகள்)*
(iv) இவ்வினாவிலே தரப்பட்ட மேற்கோளினை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. *(08 புள்ளிகள்)*

**8.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்புகள் எழுதுக.
(i) மகா அலெக்ஸாந்தர்
(ii) ஹர்ஷவர்த்தனன்
(iii) கோரி முகம்மது
(iv) வங்காளத்துப் பாலர் *(ஒவ்வொன்றுக்கும் 07 புள்ளிகள் வீதம்)*

**9.** **(A)** பகுதிக்கு **அல்லது** **(B)** பகுதிக்கு மட்டும் விடை எழுதுக.
**(A)** ஹர்ஷவர்த்தனனுக்குப் பின்பு கன்னோசியில் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்கு இந்திய அரசரிடையில் ஏற்பட்ட மோதல்களைப் பரிசீலனை செய்க. *(14 புள்ளிகள்)*

**(B)** சோழரின் அயல்நாட்டுக் கொள்கையினை ஆராய்க. *(14 புள்ளிகள்)*

* * *

Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka